**லக்கல – பல்லேகம பிரதேச சபை - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

லக்கல – பல்லேகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றை வழங்க போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் மருக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும்.

நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க கடந்த ஆண்டு ஆரம்ப மீதிகளை முன்கொண்டு வருகையில் 17 சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதிகளின் பெறுமதி ரூபா.3,647,784 கூடுதலாகவும் 10 சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதிகளின் பெறுமதி ரூபா.2,993,931 குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | 2020 திசெம்பர் 31 திகியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட இறுதிக் கணக்குகளிற்கான ஆரம்ப மீதிகள் 2019 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கென இரண்டாவது தயாரிக்கப்பட்ட இறுதிக் கணக்குளின் மீதிகளிலிருந்தாகும் என தயவாய் அறிவிப்பதுடன் இதன் காரணமாக சொத்துக்கள் கணக்கு மற்றும் பொறுப்புக்கள் கணக்கு மீதிகளில் குறைவு மற்றும் கூடுதல் காட்டப்பட்டுள்ளன. | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | மூலதன சொத்து அதிகரிப்பு மற்றும் பராமரிப்பு செலவு ரூபா 475,069 மற்றும் ஏனைய சேவைகளின் கீழான செலவு ரூபா.21,130 மற்றும் வருமான உதவி மீண்டுவரும் பெறுவனவு ரூபா.319,850 உம் வாராந்த சந்தை குத்தகை வருமானம் ரூபா.63,200 உம் வருமான செலவுக் கணக்கில் குறைத்து காட்டப்பட்டுள்ளன. | ரூபா 475,069 காப்புறுதியால் மீள்நிரம்பியதன் காரணமாக முற்கொடுப்பனவு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ரூபா.21,130 கூடுதலாக செலவின தலைப்பிற்குட்பட்ட தொகையாகும். | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மூலதன ஈடுபடுத்தலிற்கான வருமானத்தில் மற்றும் கொடையிலிருந்து பங்களிக்கும் கணக்குகளின் கூட்டுத் தொகை நிலையான சொத்துக்களிற்கு சமமாக வேண்டிய போதும் அவ் விரண்டு மீதிகளிற்கிடையில் ரூபா.4,093,098 வித்தியாசம் நிலவியது. | இது தொடர்பாக 2017 முதல் 2020 வரையான முவ்வாண்டுகளில் போலவே அதற்கு முன்னரிலிருந்தும் இவ் வித்தியாசம் காணப்பட்டதால் வித்தியாசத்தை சரிசெய்ய முடியுமான முறை பற்றிய விடய அறிவுள்ள பொருத்தமான அலுவலர் ஒருவரிடமிருந்து ஆலோசனை பெற்று செம்மையாக்கி சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | வித்தியாசத்தை செம்மையாக்கி நிதிக்கூற்றுக்களை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஈ) | கடந்த ஆண்டு அன்பளிப்பாக கிடைத்த ரூபா 2,801,950 ஆன இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் மேலும் ரூபா.532,385 பெறுமதியான தளபாடங்களும் பொருத்துக்களினதும் கூட்டுத் தொகை ரூபா.3,334,335 மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்தால் பங்களிக்கும் கணக்கிற்கு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டு அன்பளிப்பாக கிடைத்த பெறுமதி மூலதன வருமானத்திலிருந்து பங்களிப்பு கணக்கிற்கு உள்ளடக்கியுள்ளமை கடந்த ஆண்டை போல் மீளாய்வாண்டிலும் ஆரம்ப அறிவின்றி தயாரிக்கப்பட்டமை இப் பிழையான குறிப்பிடலற்கு காரணமாக அமைந்துள்ளதாக. | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (உ) | ரூபா.900,000 ஆன மூலதன செலவும் ரூபா.500,000 ஆன கடன்படுனர் மீதியும் ரூபா.32,000 ஆன தீர்க்கப்படாத முற்பணமும் ஏனைய பெறுவனவு ரூபா.678,610 உம் திசெம்பர் மாத ரூபா.20,000 ஆன சம்பளமும் 38 களஞ்சிய பண்டங்களின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தன. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது இக் குறைகளை திருத்திக் கொள்வதாக. | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஊ) | மீள் செலுத்த வேண்டிய ரூபா.134,304 ஆன நானாவித வைப்பும் சம்பள மீள்நிரப்பு வருமானம் ரூபா.79,684 உம் நடைமுறை கணக்கில் ஆண்டிறுதி மீதி ரூபா.14,657 உம், நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது இக் குறைகளை திருத்திக் கொள்வதாக. | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (எ) | சபைக்கு சொந்தமான இரண்டு மோடார் சைக்கில்கள், 03 டெக்கடர் டேலர்கள் மற்றும் அன்பளிப்பாக கிடைத்த இரண்டு தெறி கருவிகளை மதிப்பிட்டு அப் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | இவற்றின் பெறுமதிகளை மதிப்பிட்டு 2021 ஆண்டு கணக்கீடு செய்வதாக. | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 14 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்று மீதிகள் மற்றும் குறித்த நேரொத்த அறிக்கைகளின் மீதிகளிற்கிடையில் கூட்டுத் தொகை ரூபா.18,784,197 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | கூடிய விரைவில் விடய குறைகளை சரி செய்வதாக. | வித்தியாசத்தை செம்மையாக்கி நிதிக்கூற்றுக்களை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| தொங்கல் கணக்கின் ஆரம்ப மீதியில் ரூபா.1,591,753 ஆன வித்தியாசம் காணப்பட்டதுடன் காசுக் கணக்கின் ரூபா.405,322 ஆன வித்தியாசம் இக் கணக்கிற்கு செம்மையாக்கியதன் காரணமாக இறுதி இருப்பான ரூபா.2,240,195 ஆன பெறுமதி பிழையானது. | ஆரம்ப மீதி ரூபா.1,834,873 ஆனதாலும், காசுக் கணக்கு சரியாக இல்லாததனால் வேறு சீராக்கம் காரணமாக இறுதி இருப்பு அப்பெறுமானத்தை பெற்றுள்ளதாக. | நிதிக்கூற்றுக்களை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 12 கணக்கு விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா.31,394,900 ஆன நிலையான சொத்து பதிவேடுகள், அட்டவணைகள், உருதிகளை சான்றிடல் போன்ற சான்றுகள் இல்லாததால் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | கூடிய விரைவில் அட்டவணைகளை தயாரிக்க தேவையான முயற்சிகளை எடுப்பதாக. | கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்களையும் சமர்பிக்க வேண்டியமை. |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமானக் கோவை | | | |
| நிதிப் பிரமாணம் இலக்கம் 570 மற்றும் 571 | வைப்பு செய்ய திகதி இலிருந்து 02 வருடங்களை விஞ்சிய ரூபா.1,483,210 ஆன 14 வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு குழுவின் பரிந்துரையை பெற்று கூடிய விரைவில் பொருத்தமான முயற்சி எடுப்பதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவுகள் ரூபா .718,897 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரெதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா.1,567,646 ஆகும். மீண்டுவரும் பெறுவனவு மில்லியனினால் குறைந்தமை மற்றும் கணக்கீட்டு குறைபாடுகள் இதற்கு பிரதான காரணமாக அவதானிக்கப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையினால் நடாத்திச் சென்ற ரூபா.556,290 ஆன நிலையான வைப்பு மற்றும் அதற்குரிய வட்டிப் பணத்தை விடுவித்துக் கொண்டிருந்த போதும் அதற்காக மகா சபை அங்கீகாரம் பெறப்படவில்லை. | பிழையென ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகளை தவிரத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | மகா சபை அங்கீகாரத்திற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| **நீர் கட்டணம்**<br>2020 ஜனவரி 01 ஆம் திகதி நீர் கட்டண நிலுவை ரூபா.536,779 ஆனதுடன் மீளாய்வாண்டினுள் அந் நிலுவையிலிருந்து ரூபா.65,346 அறவிடப்பட்டிருந்தது. நீர்மாணி துண்டிப்பு மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து நீர் கட்டணம் அறவிடப்படாமை இதற்கான முக்கிய காரணமாக அவதானிக்கப்பட்டது. | நீர் கட்டணங்களில் பெறும் பகுதி மொரகஹகந்த கருத்திட்டத்தில் மூழ்கிய பிரதேசத்திலாகும். கூடிய விரைவில் நிலுவை பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவு பிரகாரம் நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 10 ஆண்டு காலத்தினுள் கட்டணம் செலுத்தியிருந்த 05 வியாபாரங்களிற்கு அனுமதிப்பத்திரம் வழங்காமை, தகவல்களை கிடைக்காததன் மீது 08 வியாபாரங்களிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கல் விடுபட்டிருந்தமை, குறைபாடுகளுடனான 08 வியாபாரங்களிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தமை, 04 வியாபாரங்களிற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதில் தாமதம் மற்றும் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காது 10 வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததால் வியாபார அனுமதிப்பத்திரங்கள் மீது வியாபாரங்களை நடாத்திச்செல்வதால் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட முடியுமென அவதானிக்கப்பட்டது. | ஏற்பட்டிருந்த அனைத்து குறைபாடுகளையும் தற்போது சரி செய்யது கொண்டிருப்பதாக. | சுற்றாடல் சட்ட பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியமை. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான கெப் வண்டியின் விபத்து தொடர்பாக மீள்நிரப்பப்படாத ரூபா.373,323 ஆன நட்டத்தை அறவிடும் பொறுப்பை உறுதி செய்யும் நி.பி.104(4) இறுதி அறிக்கையை விபத்து இடம்பெற்று 03 மாதங்களினுள் முன்வைக்க வேண்டிய போதும் 2021 பெப்ரவரி 21 திகதியளவில் விபத்து இடம்பெற்று ஓராண்டை கடந்திருந்த போதும் அந் நட்டத்தை அறவிட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |